Kavignan

# கவிஞன்

மாதாந்தக் கவிதைச் சிற்றிதழ்



கவிஞர். நிலா தமிழின் தாசன்

இதழ்-011 தைத் திங்கள் 2011

விலை-20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kavignan
கவி ஞன்

வணக்கம்,

19.01.2011 அன்று மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் ஆரம்ப நிகழ்வு மட்-மகாஜனாக் கல்லூரி அரங்கில் சங்கத்தின் தலைவர் பேராசிரியர்.மா.செல்வராசா தலைமையில் இடம்பெற்றது. இதில் கவியரங்கு மற்றும் ஈழத்துப் பூராடனார் நினைவுச் சிற்றுரை என்பன நிகழ்ந்தன. என்னென்று பொங்குவேன் எனும் தலைப்பிலமைந்த கவியரங்கில் வாசிக்கப்பட்ட கவிதைகளில் ஒன்று உங்களுக்காக

~நன்றி~

அன்புடன்
ஆசிரியர்

# என்னென்று பொங்குவேன்

மலர் வடிவம் அவள் முகவுருவம்
பலர் நிலைகுலையும் தளிர் மறுவுருவும்
பல மலை உயரம் அவள் அருள் நிறையும்
கலை காதலியே உனைப் போற்றுகிறேன்-
இக்கவியரங்கில் - பிழை
காத்தருள்வாய் எனத் தோற்றுகிறேன்.

பொங்குதம்மா இங்கு வெள்ளமெல்லாம் - துயர்
தங்குதம்மா மக்கள் உள்ளமெல்லாம்

மங்குதம்மா மனம் வேகுதம்மா - பலர்
ஏங்கையிலே தினம் நோகுதம்மா

தாங்க வழியில்லையம்மா - உயிர்
வாங்குமந்த அடைமழையில்
தூங்க முடியல்லையம்மா பாவம்
நாங்களென்ன செய்திடுவோம்!

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kavignan
# கவி ஞன்

தோற்றம்: 27. பங்குனி. 2010

011

19 தை 2011

ஆசிரியர் :சதாசிவம் மதன்
தொ.பே :0094 773620328
முகவரி :கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு–5(கீ.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.
மின்னஞ்சல்: kavignan@live.com

## உள்ளே....

அறிமுகப் புதுமுகம்.
இம்மாதப் பிரபலம்.
சாதியொன்று
தூறல்
கவிதைச் சமர்.
மாதம் ஒரு கீதம்
நீ வருவாயென்
பொங்கியதால் பொங்கவில்லை
கிழக்கு வெள்ளந்தந்த கீறல்
ஹைக்கூ கோணர்
படைப்பும் பார்வையும்
மேசைக்கிறுக்கல்
நிறைமகள்.
வாசகரிடமிருந்து கவிஞனுக்கு.

## சிந்தனைக்கு...

**"பா" என்றும் "கவி" என்றும் சுட்டப்படும் "கவிதை" வடமொழிச் சொல்லா அல்லது தமிழ்ச் சொல்தானா?**

"பா " சுத்தமான தமிழ்ச் சொல் "கவி" சுத்தமான வடமொழிச்சொல் "கவிதை" வடமொழி கலந்த தமிழ்ச் சொல்.

"துறை அடுத்த விருத்தத் தொகைக் கவிக்கு
உறை அடுத்த செவிகளுக்கு ஒதில் யாழ்
நறை அடுத்த அசுண நல் மாச் செவிப்
பறை அடுத்தது போதும் என் பா அரோ"

கம்பராமாயணக் காப்பியத்திற்கு வழிகாட்டும் பாயிரத்தில் கம்பராமாயணம் "தமிழ்ப் பா" என அடித்துக் கூறும் விதத்தில் "நாவிநான் உரையின்படி நான் தமிழ்பாவினால் இது உணர்த்திய பண்பு அரோ" என்று பாடுகிறார் கம்பர்.
கலப்படமில்லாத தமிழ்ச் சொல்லான "பா" "பாட்டு" விலிருந்து உருவானதே. பாடல். பாவலர்.பாடகர்.பாடகி.பதிகம்.பாசுரம்.பாமாலை.பாடுநர்(புலவர்).பாகவதர்.பாணர்.பத்துப்பாட்டு முதலியன பாடல் குறித்த தமிழ்ச் சொற்கள். "திரு அருட்பா" அன்றி "திரு அருட்கவிதை" எனும் வழக்கமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகப் புதுமுகம்



***முழுப்பெயர்*** : கிருஸ்ணன் ஜெயசங்கர்

***முகவரி*** : 204.
பண்டாரநாயக்க மாவத்தை,
இறக்குவானை.

***பிறந்த திகதி:*** 1989 மார்கழி 15

***அப்போது :***

இ-பரி யோவான் தமிழ் மகா வித்தியாலயம்

***இப்போது*** :
கிழக்குப் பல்கலைக் கழகம், வந்தாறுமூலை.

***எழுத விளைவது:***
எழுதக்கூடிய அனைத்தையும்.....

***பிடித்த கவிஞர்கள் :*** வாலி,வைரமுத்து, யுகபாரதி

***படித்ததில் பிடித்தது:***
நீ.தி . அருளானந்தம் எழுதிய
"வாழ்க்கையின் நிறங்கள்" எனும் நாவல்

# வாழ்க்கை ஓடம்

அன்னை மடியில் பிறந்து
மண்ணின் மடியில் வளர்ந்து
பன்னிரெண்டு வயதுவரை
பாசங்களோடு பின்னியிருந்து
இயற்கை உலகில்
இன்பக் குயில்களாய்
பாடித்திரிந்த நம் வாழ்க்கை ஓடம்
பள்ளிப் படிப்பென்றும்
பட்டப்படிப்பென்றும்
பருவங்கள் பல கடந்தும்
சிக்கலுக்கு மத்தியிலும்
சிறகு விரித்தது.

தந்தையின் சுமையை
தாங்கலாம் என்றபோதும்
விட்டதா வாழ்க்கை ஓடம்
வாட்டி வதைக்கிறதே!
வேலையில்லாத் திண்டாட்டம்.

சில்லறைக் கடையில்
சிறு கணக்கு பார்க்கும் வேலை
மிஞ்சியது என எண்ணினேன்
அதையும் விஞ்சியது விலைவாசி
நம் வாழ்க்கை
ஆகிவிட்டது
கானல்நீரில்
காகித ஓடம்.....

**- கி.ஜெயசங்கர் -**

**அறிமுகப் புதுமுகத்தில் அறிமுகமாக விரும்புவோர் தங்களது ஆக்கங்களுடன் அண்மையில் எடுத்த புகைப்படமொன்றை தபால்மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இம்மாதப் பிரபலம்

## கவிஞர். நிலா தமிழின்தாசன்

திருகோணமலை மண்ணில் நிலாவெளியூரைப் பிறப்பிடமாகவும் களுதாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர்.நிலா தமிழின் தாசனை இலக்கிய இரசிகர்கள் நன்கறிவர் "மிக்கேல் அருள்மொழிராஜா"என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர்,நிலா தமிழின் தாசன்,மஞ்சுளா மணாளன், நிலவூர் மஞ்சுதாசன்,தென்தமிழ் கவிக்கோ போன்ற பல்வேறுபட்ட புனைபெயர்களிலும் எண்ணற்ற கவிதைகளை எழுதியுள்ளார்.

10.12.1953 இல் பிறந்து 12 வயது முதல் எழுதும் இவரது கவிதைகளை தேசிய நாளேடுகளான தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, சுதந்திரன், ஈழநாடு போன்ற இதழ்கள் மட்டுமல்லாது சுடர், சிரித்திரன், தொண்டன், புதிய உலகம், சுமைதாங்கி, போன்ற சஞ்சிகைகளுடன் உதிரிகளாக அவ்வப்போது வெளியாகும் அச்சு, கல்லச்சு, கையெழுத்து ஏடுகள் வரை தம்மில் தாங்கி அலங்கரித்துள்ளன.

இவை தவிர இலங்கை வானொலி, வெரித்தாஸ் வானொலி மற்றும் ஐரோப்பிய தமிழ் ஏடுகள், வானொலிகளிலும் இவரது படைப்புக்கள் வாசம் பரப்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கனவாகும்.

மேலும் 1993 இல் "நாளை" என்ற கவிதை நூலினையும் 1994 இல் "புலர்வு" என்ற கவிதைத் தொகுப்பினையும் 2009 இல் " நெருப்புக்கு இடையே நீந்தும் நிலாக்கள்" என்ற கவிதைத் தொகுப்பினையும் வெளியிட்டு தமிழ்க் கவிதை இலக்கியத்திற்கு அணி செய்துள்ளார்.

1975 இல் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில் பாராட்டுப் பரிசினை முதன்முதலாகப் பெற்ற இவர், இன்றுவரை அகில இலங்கை ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் இருபதுக்கும் மேற்பட்ட பரிசில்களை வென்றுள்ளார்.

தான் எழுதிய கவிதைகளில் அனேகமான பிடித்த கவிதைகளை கடற்கோள் காவுகொண்டாலும் எஞ்சியவைகளில் நெஞ்சில் நின்ற கவிதையாக " ஓ... வையகமே!" எனும் கவிதையை கவிஞனுக்காகத் தருகிறார் கவிஞர்.

வையகம் பற்றிய கவிஞரின் பார்வை உங்கள் பார்வைக்காக.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ... வையகமே!

கவிஞர் . நிலா தமிழின்தாசன்

நன்றி வாலிபம் 1989 யூன்





மாசறுத்து ரட்சிக்க வந்த தூய
மனுமகனாம் யேசுவுக்குச் சிலுவை தந்தாய்!
நாசவழி சென்றோரை திருத்த வந்த
நாயகமாம் நபிகள் மேற் கல்லெறிந்தாய்!
தூசு தட்டிக் கிரேக்கத்தை எழுப்பவென்று
துடிதுடித்த ஞானிக்கு விடமளித்தாய்!
நேசித்தே பாரதம் மீட்ட "காந்தி"
நெஞ்சுக்குத் துப்பாக்கிக் குண்டை ஈந்தாய்

வெள்ளையரிற் குறைவல்ல கறுப்ப ரென்றே
விளங்க வைத்த தூய கென்னடிகளோடு
"கிள்ளிவிடக் கீரையல்ல" நாங்களென்று
கிளந்தெழுந்த கிங் மாட்டின் லூதர் தம்மின்
பிள்ளை நிகர் உள்ளமதை "ரவைகளாலே"!
பிளந்தெறிந்து குருதியினைக் கொட்ட வைத்தாய்
கள்ளமிலாக் கனிவு மனத் தோரையெல்லாம்
காசினியே வதைக்கின்றாய் ஓய்ந்திடாதோ?

பண்டைநாட் தொட்டுலகே பயங்கொளாது
பாதகமே இன்றும் நீ புரிகின்றாயே!
குண்டுகளைப் படைப்பதிலே போட்டி போட்டு
குவலயத்தைக் கொலைக்கிடங்காய் மாற்றுகின்றாய்
வண்டுகளாய் பூவினிலே தேனை மாந்தி
வாழ்ந்தாலும் இன்பமடா! வானரம்போல்
கண்டதையும் உண்டொழுகல் மாபேறென்பேன்
கைகளிலே கொலைக்கருவி அவைகொள்ளாவே.

உண்மைதான் உயர்வென்று ஓதுகின்றாய்
உண்மைக்காய் உழைப்போரை வீழ்த்துகின்றாய்
வண்ணமிகு சுதந்திரத்தை! மனிதர் தம்மை
வாழ்விக்கும் உரிமையினை வாழ்த்தும் நீயோ
திண்ணமுடன் அதைக்காக்கத் திரளுவோரை
சினங்கொண்டே! சிரங்கொய்து மகிழ்கிறாயே!
பண்பட்டுப் பாருலகே நீ தழைக்கப்
பசிகொண்டு அன்புவழி சென்றிடாயோ....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதியொன்று

///கதிரவன்///

சான்றோர்கள் சொல்லியதை மனதிலெண்ணியே
சாதிவேறாய் சமூகத்தைப் பிரித்துப்பார்க்கிறோம்
ஈன்றெடுத்த குழந்தைகளை இனத்தின் பெயரிலே
ஈனமாக சாதிவெறி ஊட்டி வளர்க்கிறோம்

உடல் உருவில் மாற்றமில்லா மனித ஜாதியை
உயர்வென்றும் தாழ்வென்றும் வகைப்படுத்தினோம்
சுடலை தனில் உயிரற்றுப் பிணமுமாகையில்
சடலமாக மதிக்கின்றோம் மொத்த ஜாதியை

வீட்டு நற்கருமங்களில் விலக்கி வைக்கிறோம்
வீதியிலும் அவங்க மானம் கூறிவிற்கிறோம்
பூட்டுப்போட்டு வாயடைத்து நாமம் சூட்டினோம்
பூசையிலும் பங்கெடுக்கா சட்டமேற்றினோம்

தொழில்முறையில் பெயர்களை தரம்பிரிக்கிறோம்
தொடர்வற்று கீழ்த்தனமாய் அதை நினைக்கிறோம்
பழிபாவம் சூழ்ந்துவிடும் பேதம் காட்டினால்
படைத்தவன் வேறுபாடாய் படைக்கவில்லையே

தாழ்ந்தோரென்று தள்ளிவைக்கும் தகுதியுமில்லை
தரங்கெட்ட ஜாதியென்ற பகுதியுமில்லை
ஆழ்ந்து நாமும் சிந்தித்தால் அறிவு பொங்குமே
ஆறறிவு செயலிழந்தால் எல்லாம் மங்குமே

சாதியொன்றே ஆதிமுதல் ஜோதியுமொன்றே
சாந்தமுடன் சோதரம் பேணுதல் நன்றே
நீதி நெறி ஓங்கச் சாதி வெறியுமில்லையே
நீத்தாலும் சாதியொன்றே சேர்ந்து வாழுவோம்

குருதியிலே பல நிறங்கள் மாந்தருக்கில்லை
குறை கூறின் தாழ்வான சிந்தை மட்டுமே
உறுதியுடன் மனிதனென்ற ஓரினத்தினை
உணர்வுடனே நேசித்தால் மனிதம் வாழுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூறல்

இது உணர்வு மழையின்
சிறிய துளி – உங்கள்
நினைவு அலையை
செதுக்கும் உளி

## காதலனே!

காரிருள் சூழ்ந்த இதயத்தில்
கதிரொளி வீசிய காதலனே!
நட்புக்காகப் பிறந்து
நட்புக்காக வாழ்கின்ற
காதல் கள்வனே!
என்னை உன்னுடன் சேர்த்துவிடு
என்றும் உனக்காக காத்திருப்பேன்.

## பாசம்

என் எண்ணங்களை
தேன் சிந்தும் பூச்சரங்களாக்கி
வண்ண மாலையாகக் தொடுத்து
அன்பு எனும் பாசக்கயிற்றால்
வீசுகின்றேன் உனக்காக...

**நந்தகுமார் ஜானு**
**குடியிருப்புமுனை**
**அன்னமலை-02**

## அம்மா

நண்பன் கேட்கிறான்...
"உலக அர்த்தம் எதிலுள்ளது"
நானோ சொல்கிறேன்.
"அம்மா" என்று சொல்லிப்பார்
அனைத்து உலகமும்
அர்த்தப்படும்.

## தாயன்பு கொண்ட காதல்

கண்ணே!
இறைவன் படைத்த
உயிர்கள் அனைத்திலும்
இரண்டாவது இடம் நீ!
ஏனெனில்
முதலிடம் என் தாய்!

**மேகலிங்கம் துதிகரன்**
**3ம் குறுக்குத்தெரு**
**மட்டக்களப்பு**

**அன்பான வாசகர்களே,**

**"கவிஞன்" இதழின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம். நீங்களும் இன்றே சந்தாதாரராவதோடு உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.**

-நன்றி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"வார்த்தைகள் உரசும்போது
வண்ணக் கவி உருவாகும்"

# மரபுக்கவியின் மகத்துவம்

உள்ளதும் நல்லதும் ஊருக்கே யென்று
உணர்வுடன் கவிதைபல எழுதிடும் கவிஞர்களே!
உள்ளத்தில் உள்ளதொரு உண்மையை யுரைக்கின்றேன்
உருப்படியானதொரு கவித்துவம் எதுவென்றால்
தெள்ளத் தெளிவுடன் தேமதுரத் தமிழிலே
தொன்றுதொட்டு இன்றுவரை தொலைந்திடாதுலகாளும்
அள்ள அள்ள குறையாய அமுத சுரபியாலய்
அறிவிலே ஊற்றெடுத்து ஆற்றலை வெளிப்படுத்தும்.

மங்காத புகழுடைய மகத்தான மரபுகள்
மண்ணிலே சிறப்புடன் மனதிலே நிலையாக
தங்கிடும் கவிவரிகள் தரணியைத் தாங்குவதால்
தமிழுக்கே பெருமையாம் தமிழனுக்கே பெருமிதமாம்
சங்கமமைத்த சான்றோர்கள் பா நன்று
சங்கை குறையாமல் கவியெழுது இன்று
பொங்கும் செம்மொழியின் தலைமரபுக் கவியொன்றே
எங்கும் செழிப்புடன் சிறந்தென்றும் வாழ்ந்திடுமே.

பந்தியை உடைத்து பக்கமெங்கும் நிறைத்து
பார்த்ததை இரசித்து பாமரபும் மின்றி
சிந்தனையைத் தூண்டாத புதுக்கவிகள் பிறந்தால்
சித்தமுடன் வாசிப்போர் எத்தனை பேரோ?
முந்திய மரபினை முடக்கிவிட நினைக்கும்
முடியாத செயலை மூட்டைகட்டிப்போடு
சந்ததி ஆயிரம் செத்துடல் ஆயினும்
சரித்திரம் சொல்லிடும் மரபின் சிறப்பிடம்.

– தெருவோர நடிகன் –

*சிறந்த கவிதைகள்*

**மரபுக் கவிதையா? புதுக்கவிதையதா?**

*என்று உங்கள் கருத்துக்களை கவிதையாக்கி அனுப்புங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதமொரு கீதம்

புகழ்திகழ் தமிழ்மகள் புவிமீதாளும்
பொன்னாள் வருக வருக!
மகிழ்வுறு தமிழ்நில மாந்தர்கள்பண்பு
மலைவிளக்காகவே ஒளிர்க!
சகலரும் ஒருதாய்தன்பிள் ளைகள்போல்
சமத்துவமாகவே வாழ்க!
தனித்துவம் காத்திடஎழுக!—எங்கள்
தமிழ்க்குறளறநெறி தழைக்க!
தாயகமணிக்கொடி துலங்க!
பனித்திடுமலைசூழ் பழநகர்பேரா
தனையுயர் தமிழ்க்கலைமன்றம்

வளர்க! வளர்க! வளர்க!
மானிலம் போற்றிட வளர்க!!

வளந்தரு மாவலி நதிமருங்கமைந்தபே
ராதனைப்பல்கலை மன்றில்
விளைந்திடுபயிராய் விளங்கிடுசங்கம்
வீறுகொண்டிலங்கி மிளிர்க!
இளந்தமிழ்மாணவர் இன்கலைக்கோட்டம்
இவ்வுலகுளவரை துலங்க!
ஈழமணிநாடுயர்க!—எங்கள்
நாளையவாழ்வும் உயர்க!
நமதிறை அருள்வழிபொலிக!
யாளையின் குளிர்தரு மலைசூழ்பேரா
தனைத்தமிழ்ப்பணியகம் வாழ்க!

வாழ்க! வாழ்க! வாழ்க!
பல்லாண்டுயர்வுடன் வாழ்க!!

### இம்மாதக்கீதம்

பேராதனைப்பல்கலைக்கழகத்
தமிழ்ச் சங்கக்கீதம்

### இயற்றியவர்

அக்கரைச்சக்தி (சா.சக்திதாசன்)

---

### மதிற்பிற்குரிய அதிபர்களே! ஆசிரியர்களே!

இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் கீதமும் இடம்பெற விரும்பினால், உங்கள் பாடசாலை கீதத்துடன் அதை இயற்றியவர் பற்றிய சிறு விபரத்தையும், உங்கள் பாடசாலையின் மாணவரிடமிருந்து பெற்ற ஆக்கங்களையும் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எமக்கு அனுப்பிவையுங்கள். இதன்மூலம் கவிஞனின் கலாசாலைக்கீதங்கள் தொகுக்கும் மற்றும் ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தில் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

-நன்றி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ வருவாயென்று....

அ:நவப்பிரஷாந்
நாவற்குடா

நீ வருவாயென்று
நம்பிக்கையுடன்
நாட்களை
நகர்த்திக் கொண்டிருக்கிறேன்.

என் எதிர்பார்ப்புகள்
எத்தனை எத்தனையோ
ஏமாற்றத் தவத்தோடு
உன்
வருகையைப்போல்...

எப்போது
நீ வருவாயென
கேட்டுக்கேட்டு
இம்சைபண்ணும் இதயத்திற்கு
பதில்
சொல்லிச் சொல்லி
சோர்ந்து விட்டாலும்
செல்லக் கிளியே
சலிக்கவில்லையடி
உனக்கான காத்திருப்புகள்

நித்தம் நித்தம்
உன்னைக் கேட்டு
யுத்தம் செய்யும் விழிகளுக்கு
மொழிகள் சொல்ல
முடியாமல்
நொடிகள் கூட மறவாமல்
விடியல் எல்லாம்
உனக்காகவே
காத்துக்கொண்டே
நிற்கேனடி....

எந்தன் வீட்டு
முற்றத்தின் கதவை
யார் வந்து
தட்டினாலும்
ஏக்கத்தோடு எட்டிப் பார்க்கும்
விழிகள்....
நீ இல்லை........
என்ற பின்பு
மீண்டும்
விழி வழியே
கண்ணீர்
அருவியாகி வழியுதடி!



2011 ஆண்டுக்கான கவிஞன் சந்தாதாரராக விரும்புவோர் மற்றும் தங்கள் பகுதிகளில் கவிஞன் சஞ்சிகையினை வினியோகிக்க விரும்புபவர்கள் கவிஞன் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் 1 இன் தொடர்ச்சி...

வங்கமனைய வோர்
கங்கை பெருக் கெடுத்தோடிடவே- மக்கள்
தங்களிருக்கையில் தங்கவழியின்றி
எங்கு செல்லவென வாடிடவே
சங்கு முழங்கிட சாமரை வீசியே
பஞ்சந் தலைவிரித் தாடிடவே - நானும்
நெஞ்சு நிமிர்த்தியே வாஞ்சையோடிங்கு
என்னென்று முன்நின்று பொங்கிடுவேன்.

பள்ளிகளெல்லாம் தயாராகின
வெள்ளமுகாமாகிடவே - பஞ்சம்
எள்ளிநகை யாடுதிங்கே -தினம்
துள்ளி விளையாடு தங்கே!

மெல்ல மெல்ல வந்து வெள்ளம்
துல்லியமாய் சொல்கிறது
இல்லை பொங்கல் இல்லையென்றே - அது
வல்லினமாய் சொல்கிறது - மீறி
என்னவென்று பொங்கிடுவேன் - நானும்
என்னவென்று பொங்கிடுவேன்.

அஞ்சுகின்ற பிஞ்சு மனம்
கெஞ்சுகின்ற தின்று நிதம்
முஞ்சுதலை விஞ்சி யொரு
தஞ்சமில்லை என்று எண்ணி

எஞ்சியவை என்று சொல்ல
கொஞ்சமுமே மிஞ்சவில்லை
இந்த நிலை மாறுமுன்னே!
என்னென்று பொங்கிடுவேன் - நான்
என்னென்று பொங்கிடுவேன்.

வெள்ளமிங்கு பொங்கி வர
வள்ளமெல்லாம் வீதி வர
கள்ளரெல்லாம் ஒன்றுபட
வள்ளரெல்லாம் தள்ளி நின்றால்
என்னவென்று பொங்கிடுவேன் - நான்
என்னவென்று பொங்கிடுவேன்.

அலையலையாய் வெள்ளம் வந்து
தலைதலையாய் கொண்டு செல்ல
நிலைகுலையும் நம்மவரை
நிற்கதியாய் விட்டுவிட்டு
என்னவென்று பொங்கிடுவேன் - இங்கு
தன்னந்தனி நின்று கொண்டு - நான்
என்வென்று பொங்கிடுவேன்.

வயல் நிலம் கலையுதே!
வளம் பலம் குலையுதே
நிலம் ஜலம் ஆகுதிங்கே!- மக்கள்
நலம் சிலை யாகுதே
தனம் குலைந் தோடுதே!
இனம் தலை மூழ்குதிங்கே! - நானும்
என்னென்று பொங்கிடுவேன் - இங்கே
என்னென்று பொங்கிடுவேன்

கூரைகள் ஏறி
கதறல் விண்ணேக - வெள்ள
நீரையே மீறியொரு
போர் தொடுப்போம் - பாரை
ஓரணியாய் நின்று நாமும் நேர்த்தி செய்வோம்
அதற்காய்
பேரணியாய்ப் பொங்கி எழுந்திடுவோம்.- நாம்
பேரலையை விஞ்சி எழுந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட
பாற்கடலீந்த பிரான் – எம்
மக்காளும் நோக்களால்
வெந்து அழுந்திடல்
நோக்கிடல் வேண்டுமென –
நான்
சினங்கொண்டு சிவனுன்மேல்
பாப்புயல் வீசியே பொங்கியெழுந்திடுவேன்.

முக்கண்ணனே நீயும் இக்கணமே வந்து
மக்களைக் காக்கவேணும்– இல்லை
செக்கணும் போகுமுன்
சினங்கொண்டு நானும்
பொங்கி யெழுந்திடுவேன் – உன்மேல்
பொங்கியெழுந்திடுவேன்.

வெந்து சிறைபடும் எந்தனினத்தவர்
சொந்தமுண்டென்று நான்
பொங்கிடுவேன் –பின்
கந்தகமாய் ஒரு முந்திய சந்ததி
தந்தது நாமெனப் பொங்கிடுவேன்
மாண்டவர் பூமியை ஆண்டவர் நீயென
மீண்டெழுந்து நான்
பொங்கிடுவேன் – தமிழ்
தாண்டு போகாதென பொங்கிடுவேன்
ஆமியடுத்து சுனாமியடித்ததால்
சாமிபொய் யென்று நான் பொங்கிடுவேன்
ஊரையழித்திடும் வெள்ளமொழித்திட
பாரிலே எந்திரம் செய்திடுவேன்
நாதியழித்திடும் மாமழை போக்கிட
ஏதிலையே எனப் பொங்கிடுவேன் – வேறு
என்னவென்று நான் பொங்கிடுவேன்

–மதன்–

# பொங்கியது பொங்கலில்லை

இருபது பதினொன்று ஆண்டது
இன்பந்தருமென நினைத்திருந்தோம்
வருவது பொங்கல் தினமென
வண்ணமாய் கற்பனை செய்திருந்தோம்

பொங்கவில்லை நாங்கள் வீட்டிலே
வெள்ளமே எங்கும் பொங்கியது
மங்கியது வெய்யோன் ஒளியெங்கும்
மழையோ வாரமாய் கொட்டியது

குணதிசை மாகாண மக்கள்
குடியிருக்கும் வீட்டினுள்ளே
கணப்பொழுதும் ஓயாது
ககனமழை பொங்கியது

தண்ணீர் எங்கும் பொங்கியதால்
தைப் பொங்கல் பொங்கவில்லை
கண்ணீர் வடிந்த முகங்களிலே
கவலை வெள்ளம் பொங்கியது

குளங்கள் வாய்க்கால் குட்டைகளில்
குடியிருக்கும் காணிகளில்
வளம் கொளிக்கும் வயல்களிலே
வற்றா வெள்ளம் பொங்கியது

அடை மழையின் வெள்ளத்தால்
அகதி மக்கள் கூட்டமது
மடைதிறந்த வெள்ளமென
மகிழ்விழந்து பொங்கியது.

– தம்பிலுவில் ஜெகா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு வெள்ளம் தந்த கீறல்

கோரச் சுனாமியும் போரின் கொடூரமும்
கொடுத்தது மறையு முன்னே
ஊரைப்புரட்டியே உருட்டும் வகையினில்
ஓடுதே மழை வெள்ளமே!
வேரைப்பிடுங்கியும் வீதியுடைத்துமே
வீடுகள் தகர்த்துக்கொண்டே
ஆரைப்பலிகொள்ள லாமென்று ஆர்த்திடும்
அனர்த்தமாம் பெருவெள்ளமே!

கெடுப்பதூ உம் கெட்டார்க்குச்
சார்பாய்மற் றாங்கே
எடுப்பதூ உம் எல்லாம் மழையென்று
வள்ளுவர் இயம்பிய வார்த்தைபோலே
படுப்பதற்கும் இருப்பதற்கும் வழியின்றி
மக்களெலாம் பதறியே துடித்துப்போனார்
கொடுப்பது போல்காட்டிக் கொல்லவந்த
மழைகண்டு குலைந்துவிட்டார்!

வயல்வரம் புடையுதே மண்ணரித்தோடுதே!
வான்மழை தொடர்கின்றதே!
புயலதும் அடிக்குதே! போர்த்தியும் குளிருதே!
புகைமுகில் பொழியும் நீரை
இயல்புக்கு மாறாக இருப்பிடம் மூழ்கிட
இந்திரன் அனுப்பினானோ!
அயல்இடம் முழுவதும் ஆறுகள் சூழ்ந்திட
அலைகடல் போலாயிற்றே!

வீதியை மேவியே வெள்ளமும் பாயுதே
வெளிக்கிட்டு ஓடுதற்கும்
நாதியே அற்றதாய்ப் போனதே நம்மவர்
நடுங்கியே நனைகின்றாரே!
பாதியே உயிருடன் பதைபதைக்கின்றனர்
பார்த்திட மனம் உருகுதே!
ஏதிலியாகியே இருப்பிடம் இழந்தவர்
எங்குதான் இருக்கின்றாரோ?

விடாப்பிடி யாய்மழை கொட்டினால் எவ்வாறு
வேலைகள் செய்யலாகும்?
அடா கல்விச் சாலைகள் யாவுமே
அகதிகள் முகாமாயிற்றே!
படாரென மரங்களும் முறிந்துமே விழுவதால்
பாதைகள் தடையாயிற்றே!
எடா இனிப் பள்ளிகள் திறந்திடும் நாளெதோ?
எப்போது படிக்கச்செல்வோம்?

உலர்பனிக் கட்டிதூவி மழைபெய்விக்கும்
ஓர்வகையாம் தொழில்நுட்பம் உள்ளபோதும்
குலைநடுக்கம் வரக் கொட்டும் மழைநிறுத்திக்
கொள்கின்ற தொழில்நுட்பம் கண்டோமில்லை!
மலையுடைக்கப் பாய்கின்ற வெள்ளந்தன்னை
வடிந்தோடச் செய்யும் நிர்மாணம் ஆக்கல்
தலையாய கடமையென எண்ணி நாளும்
தமிழ் அறிஞர் பெருமக்கள் செயல்செய்வீரே!

இந்திரா! உடனே மழையை நிறுத்திடு!
எம்மிலே இரக்கம் கொள்வாய்!
அந்தரப் படுபவர் அனைவரும் திரும்பியே
அவரவர் இடம்சேரட்டும்!
உந்தனின் கோபத்திற் குற்றதோர்காரணம்
உரைத்திடு! உன்னைவாழ்த்தி
இந்திர விழாவினை விரைவில் நடத்துவோம்
இனியும்இத் துயரம் வேண்டாம்.!

அக்கரைச்சக்தி
சா.சக்திதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறைக் கோபம்
அடிக்க அடிக்க
அதிரும் பறை

-கவிஞர்.மித்ரா-

# ஹைக்கூ கோணர்

## தமிழில் ஹைக்கூ கவிதைகள்

மு.முருகேஷ் (தமிழ்நாடு)

கீழ்த்திசைப் பண்பாட்டின் வாழ்வியல் சூழலோடும், ஜென் புத்தமதத் தத்துவப் பார்வையின் பின்னணியோடும் பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் கண் மலர்ந்தவையே ஹொக்குப் பாடல்கள் என்றழைக்கப்பட்ட ஹைக்கூ கவிதைகள்.

ஜப்பானிய மண்ணில் வேர்விட்டுத் துளிர்த்த ஹைக்கூ கவிதைகளுக்கு நீர் வார்த்த ஹைக்கூ முன்னோடிகள் பாஷோ, பூஸன், இஷா, ஷிகி ஆவர்.

வெறும் வறட்டுத் தத்துவமாக இல்லாமல், இயற்கையின் மீதான காதலோடு இருந்ததால் ஜென் தத்துவ ஞானிகளின் கைப்பிள்ளையாய் ஹைக்கூ வளர்ந்தது. சூறைக் காற்றில் திசைத் தப்பி விழும் விதை போலின்றி, தன்னியல்பாய் உலகின் திசைகளில் மெல்லத் தன் சின்னச் சிறகை விரிக்கத் தொடங்கியது ஹைக்கூ.

தமிழுக்கு முதன்முதலாக ஹைக்கூ கவிதைகள் பற்றிய அறிமுகத்தைத் தந்தவர் மகாகவி பாரதியார். சுதேசமித்திரன் (16.10.1916) இதழில் ' ஜப்பானிய கவிதை ' எனும் தலைப்பில் பாரதியார் ஒன்றரைப் பக்க சிறுகட்டுரை எழுதினார். அதில், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், ஜப்பானிய கவிதையின் விசேஷத் தன்மை என்று நோகுச்சிப் புலவர் சொன்னதையே திரும்பவும் கூறி, சிலாகித்து எழுதியுள்ளார் பாரதியார்.

பாரதியாரின் இக்கட்டுரை வெளியான அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு 1966 ஜனவரியில் கணையாழி இதழில் சில ஹைக்கூ கவிதைகளை தமிழில் சுஜாதா மொழி பெயர்த்தார். நடை (அக்டோபர் – 1968) இதழில் சி.மணி ( பழனிச்சாமி ) ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளை ஆங்கில வழி மொழி பெயர்த்து வெளியிட்டார்.

1970–களுக்குப் பிறகே, தமிழில் ஹைக்கூ கவிதைகள் எழுதப்பட்டன. கவிக்கோ அப்துல்ரகுமான் தனது பால்வீதி (1974) தொகுப்பில் சிந்தர் எனும் தலைப்பில் சில தமிழ் ஹைக்கூ கவிதைகளை எழுதினார்.

**தொடரும்...**

---

வெடித்தது பலூன்
காற்றுக்கு விடுதலை
குழந்தையின் அழுகை

ஈரமும் சுடுகிறது
அம்மாவுக்கு
மழையில் நனைந்த குழந்தை

– மு.முருகேஷ்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பும் பார்வையும்

– கவிஞன் –

படைப்பு : ஒரு மலரின் பயணம்
ஆசிரியர் : எஃப். ரிஸ்கா ரிஸ்வி
பார்வை : கவிஞன்

ஒரு மலரின் பயணத்தின் சாரதியாய் சாதாரண தரம் பயிலும் பதுரியா மத்திய கல்லூரி மாணவி ரிஸ்கா ரிஸ்வி அவர்களின் பயணங்கள் ஒரு மலரின் பயணத்தினூடாக படைப்பாக்கப் பட்டுள்ளமை பாரட்டப் படவேண்டியதே!

"தந்தை வழி தழைத்த கவித்திறனே எனக்குள்ளும் இங்கு அழகுற முளைத்து விட்டது" என தன்னைப் பற்றிக் கூறுவது அவர் கவிதைகளில் உயிரோட்டமாய் ஊடாடியிருப் பதிலிருந்து புரிந்து கொள்ளவும் முடிகிறது.

"ஒரு மலரின் பயணம்" தொடங்கி "இதோ என் குரல்" வரை இருபத்தியெட்டு மையங்களில் தரித்திருக்கிறது இந்தப் பயணம். ஒரு வாசகன் தனது இரசிகனாக வேண்டும் என்பதையும் இறையருளையும் வேண்டி முதற் கவிதையில் எதிர்பார்க்கும் தன்மை எதுகை. மோனையுடன் விண்ணேகி நிற்கிறது.

பாசம். மனித நேயம். சோகம். என்பவற்றுடன் தோட்டத் தொழிலாளர்கள் பற்றியும் தனது பயணத்தில் உள்வாங்கிக் கொள்ள எதுகை மோனை என்ற அணிகளுக்கப்பால் பக்கம் இருபத்தி ஒன்றில் புதுவித அணியொன்றை இவர் புகுத்த முனைவது வாசகரைப் புல்லரிக்க வைக்கிறது.
ரிஸ்கா ரிஸ்வி யின் அக் கவிதையே இப் பயணத்தின் முக்கிய நிலையமாய் நிலைகொள்ளும் என்பது எனது பார்வையில் ஒரு சேர்வை.

இக்கவிதை உங்கள் இரசிப்புக்காய்..

## பதுரியா

*படிப்பினில் நீ சிகரமாய்– எமக்கெல்லாம்*
*துணையகமாம்*
*ரிஸ்கா இவளின் பாசறையாம்*
*யா ன் காணும் கோபுரமாம்*

*கபட மற்ற தாபகமாம்*
*பதும நிலத் தாபகமாம் – எமை*
*சரி செய்யும் கலையகமாம் – என்றும்*
*ஓயாத பணியகமாம்*

*கலபமாய் கல்வியே ஊட்டிவிடும்*
*பழுது இன்றி நாளுமே நிலைத்திடும் – என்*
*கைவரியும் இலகுவாயுனை மெச்சிடும்*
*அடையாக் கதவுகள் உனக்குண்டென்றும்*

- எஃப். ரிஸ்கா ரிஸ்வி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உன் நினைவுகளின்
பயணத்தில் - என்
வாழ்க்கை தொடரும்

உங்களை விட்டுப் பிரிகிறேன்
சந்தோசத்தோடு பிரிகிறேன்
கண்ணாடியைக் காயப்படுத்தாமல்
பிரியும் விம்பம் போல பிரிகிறேன்
என்னைத் தேடவேண்டாம்
என்று சொல்லமாட்டேன்
ஆனால் நீங்கள்
தொலைத்த இடத்தில்
நான் இல்லை
உன்னுடன் வாழ்ந்த
இந்நாட்கள்
என் வாழ்வில்
பொன்நாட்கள்

கண்ணாடி உடைத்தால்
கடையில் வாங்கலாம்
என்
இதயமல்லவா
உடைந்து விட்டது உன்னால்
அதை நான்
எங்கே போய் வாங்கிடுவேன்!

மை விழியாளே!
மயக்கிவிட்டாயடி! - என்னை
உன் மாய்க்கும்
பார்வையாலே!

இதயத்தை நொருக்கிவிட்டுப்
போறவளே - என்
சோகத்தையும்
இறக்கிவிட்டுப் போ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நிறைமகள்

-வேதமூர்த்தி-

எழுந்தான் மன்னன்
எங்கே பரிசு எங்கே பரிசு
ஆயிரத்தெட்டுப் பொன் களஞ்சு
ஆரவாரித்தது.
மாலை மங்கை மார்பை
பேரம் பேசியது.

வஞ்சியின் நஞ்சு
விழிகளில் மயங்கி
அவள் நெஞ்சத்தின் மஞ்சத்தில்
துஞ்சக் கெஞ்சிய ஆடவர்
நெஞ்சங்களின் ஆவலுக்கு
காவல் திறந்தது
" ஆயிரத்தெட்டுக் களஞ்சி
மாலைக்கு ஆயிரத்தெட்டுக் களஞ்சி
பொன்தர முன்வரின்
பெண் வரும்" என்ற
பேதையின் அறிவிப்பால்
ஆடவர் முண்டியிட
அவன் சிரித்தான்.

முத்தத்தின் சாகரமாய்
முற்றத்தை மொத்தகில்
அலங்கரித்த வர்த்தகன்
எழுந்தான்.
ஆயிரத்தெட்டென்ன
நூறாயிரத்தெட்டும் தூசி
அவளின் அங்கங்களுக்கு
தங்கம் நிகரா என்ன?
மாலைக்கு மாறியது பொன்
மங்கைக்கு மாறியது கண்
தன்கைக்கு மீறியது தனம்
பெண்கைக்கு மாற



மாதவி

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகரிடமிருந்து கவிஞனுக்கு

அன்பான கவிஞனுக்கு வணக்கம்.

நல்ல ஆக்க பூர்வமான கவிதைகளை வெற்றி நடையோடு வளங்கிக் கொண்டிருக்கும் கவிஞனுக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக் கவிஞன் சஞ்சிகையை நானும் படிப்பதற்கும் எனது ஆக்கத்தை எழுதுவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த செ.சுரேன் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்.ஜானு

## *"கவிஞன்" ஒரு சிந்தனை* - அருள்மணி (இரா.நாலிங்கம்)

*'கவிஞன்' நல்ல வடிவமைப்புடன் வெளிவருவது குறிப்பிடத்தக்கது இதன் பயன்பாடுபற்றிச் சிறிது கூறவேண்டும்.*

*புதுக்கவிதை உருவான பின் ஏராளமானோர் கவிதை எழுதுகின்றனர். இளந்தலை முறையினர், பாடசாலை மாணவர்கள், மாணவிகள் இதில் ஈடுபடுகின்றனர் ஆனால் அவர்களது ஆக்கங்கள் இலங்கையின் பிரபல தினசரிகள் , சஞ்சிகைகளில் இடம்பெறுவது குறைவு. ஆசிரியர்களின் தயக்கமே இதற்கு காரணம்.*

*இவ்வாறு எழுதப்படும் கவிதைகள் பிரசுரமாகாத நிலையில் இளங்கவிஞர்கள் மனம் தளர்ந்து விடுகிறார்கள் தொடர்ந்து எழுதுவதில் ஊக்கம் காட்டுவதில்லை.*

*இந்த நிலையில் அத்தகைய இளங்கவிஞர்களுக்கு 'கவிஞன்' கைகொடுத்து உதவுகிறது. அத்தகைய கவிதையை பிரசுரித்து இளம் கவிஞர்களை ஊக்குவிக்கிறது.*

*இளங்கவிஞர்கள் 'செப்பலோசை' யைக் கவனித்தால் மரபு ரீதியான செய்யுளை அமைக்கலாம். புதுக்கவிதை எழுதுபவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.*

*ஆத்திசூடி, கொன்றைவேந்தன்,வாக்குண்டாம், நன்நெறி, நல்வழி, முதலிய நீதி நூல்கள் எளிய முறையில் செய்யுள்களைக் கொண்டுள்ளன. இவற்றைப் படிப்பதன் மூலம் இளங்கவிஞர்கள் மரபு வடிவிலான செய்யுள்களை மிக இலகுவாக எழுதலாம்.*

*(தொடர்ச்சி அடுத்த இதழில்...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவா மல்டி கொம்லக்ஸ்

பிரதான வீதி,புதுக்குடியிருப்பு. (பாடசாலைக்கு முன்னால்)

பாடசாலை உபகரணங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள் . போட்டோப் பிரதி லெமினேற்றிங் கொம்பியூட்டர் ப்பிரின்டிங் ஸ்கேனிங் Internet & E-Mail சேவை விளையாட்டுப் பொருட்கள்.பரிசுப்பொருட்கள். வாழ்த்தட்டைகள். புக் வைண்டிங்

**VCD, DVD Writing**

மற்றும் **Mobitel ,Dialog,Airtel Reload**

**Dialog, Mobitel, Suntel, SLT net, SLT Passport** போன்ற அனைத்து முற்கொடுப்பனவு அட்டைகளும் இங்கே பெற்றுக்கொள்ள முடியும்

தொடர்புகளுக்கு : 0770452861 , 0653641247

E- Mail : psnraj@yahoo.com




**நகரும் நாட்களின் தொடரும் விடிவிற்காய் உங்கள் மனப்பதிவுகளை கவிஞன் எனும் காலக்கண்ணாடியில் தரவேற்றம் செய்து, உங்கள் ஆக்கங்களையும் காலத்தின் தேவையையும் கலையினூடு பகிர்ந்து கொள்ளுங்கள்**

**உங்கள் ஆக்கங்களை கீழுள்ள முகவரிக்கு அனுப்பி காலக்கண்ணாடியின் கோலப்புத்தகத்தில் நீங்களும் புள்ளி வையுங்கள்!!!**


**அனைத்துத் தொடர்புகளுக்கும்:**

**"கவிஞன்"**
**கூட்டுறவுக் கடை வீதி.**
**புதுக்குடியிருப்பு - 5 (கீ.மா).**
**மட்டக்களப்பு.**
**இலங்கை.**
0773620328


**அனைத்து ஆக்கங்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்புடையவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org